| | | |
|---|---|---|
| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| | மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022(2023)<br>Third Term Exam - 2022(2023) | |
| | கிறிஸ்தவம் தரம் 10<br>Christianity Grade 10<br><br>Class:- ................................................ | நேரம் 2 மணித்தியாலயம்<br>Time 2 Hours<br><br>Index No:- ........................................ |

## பகுதி – 1

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) அவர் பெரியவராயிருப்பார் .......................... எனப்படுவார், மேற்குறிப்பிட்ட இடைவெளிக்கு பொருத்தமான வார்த்தை
   1. உயர்ந்த ஆலோசகர்
   2. அமைதியின் அரசர்
   3. உன்னத கடவுளின் மகன்
   4. என்றுமுள்ள தந்தை

2) குழந்தை வளர்ந்து மனவலிமை பெற்றார் . இஸ்ரயேல் மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை அவர் பாலை நிலத்தில் வாழ்ந்து வந்தார். இங்கு குழந்தையாக குறிப்பிடப்படுபவர்,
   1. இயேசு
   2. செகரியா
   3. ஈசாக்கு
   4. திருமுழுக்கு யோவான்

3) தாவீதின் ஊர் என அறியப்படுவது
   1. கலிலேயா
   2. பெத்லகேம்
   3. எருசேலம்
   4. சமாரியா

4) செக்கரியா மற்றும் எலிசபெத்து ஆகியோருக்கு வயது முதிர்ந்த காலத்திலே குழந்தை பெற்ற சம்பவத்தின் மூலம் விளக்கப்படுவது,
   1. பாவ மன்னிப்பின் மூலம் மீட்பை அனுபவிக்க முடியும் என்பதாகும்.
   2. எப்பொழுதும் இறைவனுக்குள் தமது தனித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
   3. உலக வாழ்வை மேம்படுத்துவதன் முக்கியத்துவம்.
   4. தாழ்மையோடும் விசுவாசத்தோடும் இறை வேண்டல் செய்வதன் முக்கியத்துவம்.

5) இயேசு ஒலிவ மலையில் செய்த இறை வேண்டலின் ஊடாக நாம் கற்றுக்கொள்வது
   1. எதிராளிகளுக்கு தண்டனை கொடுத்தலை இறைவனிடம் ஒப்படைத்தல்
   2. எமது பாதுகாப்பை சரியாக கவனித்துக் கொள்ள வேண்டும்.
   3. வாழ்வில் நெருக்கடியான சூழ்நிலையிலும் இறை விருப்பத்தை நாட வேண்டும்.
   4. பாவிகளை நிராகரித்து இறைவனை நெருங்குதல்

6) இயேசு அரசனாக எருசலேமுக்குள் நுழைதல் குறித்து மாணவரால் எழுதப்பட்ட வசனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

   A- மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு இயேசுவை அழைத்து வந்தார்கள்.

   B- இயேசு , உரோமைய பேரரசுக்கு எதிராக விடுதலை தலைவராக பயணித்தார்.

   C - பரிசேயரும் சதுசேயரும் இயேசுவுக்கு மதிப்பளிந்தனர்.

   D- இறையரசின் அடிப்படை சமாதானம் என பிரதிபலிக்க செய்தார்கள்.



kalvi.lk

இவற்றில் சரியானது ,

1. A , D 2. B,C 3. C,A 4. D,B

7) திருமுழுக்கு யோவான் மனந்திரும்புதலுக்கான திருமுழுக்கிற்காக அழைத்து
   1. சதுசேயரையும் பரிசேயரையும்
   2. அனைத்து மக்கள் பிரிவினரையும்
   3. படைவீரரையும் வரிதண்டுவோரையும்
   4. வரி செலுத்த தவறுவோருக்கு

8) இறையரசின் அழைப்புக்கு சரியாக மாறுத்தரம் அளிக்க,
   1. உலக தொடர்புகளை கைவிட வேண்டும்.
   2. வரப்பிரசாதங்கள், சொத்து சுகங்களை அனுபவிக்க வேண்டும்.
   3. பிரச்சினைகளுக்கு தீர்வை கண்டுபிடிக்க வேண்டும்.
   4. அன்றாடம் சிலுவை சுமந்து கொண்டு பயணிக்க வேண்டும்.

9) "அஞ்சாதீர் உமது மன்றாட்டு கேட்கபட்டது". இவ் வார்த்தை கூறப்பட்டது.
   1. சிமியோனுக்கு 2. மரியாவுக்கு
   3. செகரியாவுக்கு 4. எலிசபெத்துக்கு

10) இயேசு பிறப்பிலிருந்து மாறுத்தரம் காட்டிய இடையர்கள் மூலமாக வாழ்வில் காட்டப்பட வேண்டிய பண்பு
   1. பொறுமை மற்றும் அன்பு 2. இரக்கம் மற்றும் கீழ்ப்படிவு
   3. தாழ்மை மற்றும் கீழ்ப்படிவு 4. அன்பு மற்றும் இரக்கம்

11) அரிமத்தியா யோசேப்பின் செயலினூடாக முன்மாதிரி பெறும் நாம்,
   1. ஆட்சி அதிகாரங்களுக்கு கட்டுப்பட கற்றுக்கொள்ள வேண்டும்.
   2. மேலதிகமானதை தியாகம் செய்ய பழக வேண்டும்.
   3. சமூக மதிப்பிற்கு உட்படுவதற்காக செயற்பட வேண்டும்.
   4. துணிவுடன் உண்மைக்கு சான்று பகர்வதில் எப்போதும் ஈடுபட வேண்டும்.

12) இயேசுவின் போதனைகளில் பிரதான கருத்தாக அமைவது
   1. அன்பு 2. திருச்சட்டம் 3. விசுவாசம் 4. இறையரசு

13) நாசரேத்து அறிக்கையினூடாக அனைத்து மக்களும் பெற்றுக்கொண்டது.
   1. பாவத்திலிருந்து மீள்வதற்காக உரிமையைப் பெறல்
   2. சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையைப் பெறல்
   3. யூத சட்ட திட்டங்களை முழுமையாக தடைசெய்தல்.
   4. குரு, அரச மற்றும் இறைவாக்கு பணிகளுக்காக எண்ணெய்யால் அருட்பொழிவு பெறல்.

14) சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   1. இயேசுவால் சீடர்களுக்கு
   2. இயேசுவால் மக்களுக்கு
   3. சீடர்களால் மக்களுக்கு
   4. திருமுழுக்கு யோவானால் மனம் திரும்பியோருக்கு

15) இயேசு அரசனாக வெற்றிப்பவனியாய் நுழைந்த நகரம்
   1. எம்மாவூர் 2. பெத்தானியா 3. எருசலேம் 4. பெத்லகேம்



kalvi.lk

16) பாஸ்கா எனப்படுவது,
1. யூதர்களின் அர்ப்பணிப்பு விழாவாகும்.
2. இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக நன்றி செலுத்தும் தினமாகும்.
3. திருமுழுக்கு இடம்பெறும் தினமாகும்.
4. ஐக்கியத்திற்காக ஒன்று கூடும் தினமாகும்.

17) பத்துக் கட்டளைகளுள் ஒன்றல்லாதது
1. ஓய்வு நாளை பரிசுத்தமாக கடைப்பிடித்தல்
2. தாய், தந்தையரைப் பராமரித்தல்
3. பொய்ச்சாட்சி சொல்லாதிருத்தல்
4. சிலைகளை வணங்குதல்

18) பரிசேயர் திருமுழுக்கு பெற்றமைக்கான காரணம்
1. பிறரிடமிருந்து தம்மை பிரித்துக் காட்டுவதற்காகும்.
2. தாம் முக்கியமானவர்கள் என காண்பிப்பதற்காகும்.
3. மனந்திரும்புவதற்காகும்.
4. இலகுவாக தூய ஆவியானவரை பெற்றுக் கொள்வதற்காகும்.

19) இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வின் போது பேதுரு உட்பட சீடர்கள் மூவரும் அறிந்து கொண்டது.
1. இயேசுவின் போதனைகளை பின்பற்றுதல்.
2. இயேசுவின் இளமைக் காலத்தை பின்பற்றுதல்.
3. இயேசுவின் தீர்ப்பை பின்பற்றுதல்.
4. இயேசுவின் துன்புறத்தலை பின்பற்றுதல்.

20) நாம் தவறு செய்வதற்கு முன்பதாகவே இயேசு எமக்கு மன்னிப்பு வழங்குவார் என கூறும் கூற்று
1. நீங்கள் சோதனைக்கு உட்படாதவாறு இறைவனிடம் வேண்டுங்கள்.
2. விசுவாசம் சீர்குலையாதவாறு நான் உங்களுக்காக வேண்டுகிறேன்.
3. நீங்கள் மனம் திரும்பிய பின் உங்கள் சகோதரரை உறுதிப்படுத்துங்கள்.
4. சகோதரரே உங்கள் பாவம் உங்களுக்கு மன்னிக்கப்பட்டது.

21) திருமுழுக்கு யோவானுடைய பணியைச் குறித்து வெளிப்படுத்திய இறைவாக்கினர் யார்?
1. எரேமியா
2. மலாக்கி
3. யோவேல்
4. எசேக்கியேல்

22) காபிரியேல் தேவதூதனால் திருமுழுக்கு யோவானின் பிறப்பைக் குறித்து அறிவிக்கப்பட்டது.
1. சகரியாவிடம்
2. எலிசபெத்திடம்
3. மரியாவிடம்
4. யோசேப்பிடம்

23) இயேசுவின் பிறப்பைக் குறித்து இறைவாக்கினர் ஏசாயா கூறிய இறைவாக்கானது,
1. அவர் பெரியவராயிருப்பார் ; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்.
2. நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லேகேமே , யூதாவின் குடும்பங்களுள் மிக சிறியதாய் இருக்கின்றாய்.
3. காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்.
4. அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார்.



kalvi.lk

24) இயேசுவின் பிறப்பிற்கு அடையாளமாக உதித்த விசேட நட்சத்திரத்தை குறித்து கூறப்படும் நற்செய்தி நூல் யாது?
   1. பரிசுத்த மத்தேயு
   2. பரிசுத்த மாற்கு
   3. பரிசுத்த லூக்கா
   4. பரிசுத்த யோவான்

25) திருமுழுக்கு யோவானின் காலத்தில் யூத மதத்தவர்களின் பிரதான ஆசாரியர் பதவி வகித்தவர் யார்?
   1. பிலாத்து
   2. தோமா
   3. காய்பா
   4. ஏரோது

26) மனந்திரும்பிய மக்களோடு இயேசு திருமுழுக்கு பெற்றுக் கொண்டதன் காரணம்
   1. இயேசு கிறிஸ்துவின் வல்லமையைக் காட்டும்படி
   2. இயேசு திருமுழுக்கு யோவானின் பணியை முன்னெடுத்துச் செல்வார்.
   3. இயேசுவின் கீழ்ப்படிதலும் திறமையும்.
   4. இயேசுவின் கீழ்ப்படிதலும் நேர்மையும் குணாதியங்களை காட்டுவதற்கு

27) இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்து முதன்முதலாக அறிந்து கொண்டவர்கள்
   1. சீடர்கள்
   2. பெண்கள்
   3. பரிசேயர்கள்
   4. பிள்ளைகள்

28) கபாலஸ்தவம் என்ற இடத்தில் நடைபெற்ற சம்பவம்
   1. இயேசு கிறிஸ்து திருமுழுக்குப் பெற்றது.
   2. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பெற்றது.
   3. இயேசு கிறிஸ்து மறுரூபமாக்கப்பட்டது.
   4. இயேசு கிறிஸ்துவுடன் இறுதி இராப்போசனம் நடைபெற்றது.

29) இயேசு கிறிஸ்துவின் மேல் கூறப்பட்ட குற்றச் சாட்டை விசாரிக்கும்படியாக முதலாக யாரிடம் கொண்டு செல்லலப்பட்டார்?
   1. யூதர்களின் உயர் நீதிமன்றம்
   2. பிலாத்துவிடம்
   3. ஏரோதிடம்
   4. அனனியாவிடம்

30) இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த சீடன்
   1. காய்பா
   2. தோமா
   3. யூதாஸ்
   4. பார்தலமேயு

31) இயேசு கிறிஸ்து ஒலிவமலையில் செய்த ஜெபத்தின் மூலம் உறுதிப்படுவது
   1. வியர்வை, இரத்த துளிகள் துளிகளாக தரையில் விழுந்தமை
   2. இரவு முழுதும் ஜெபித்தார்.
   3. களைப்பை உணர்ந்தார்
   4. மயக்கமுற்றார்

32) பயப்படாதே நீ மனிஷரைப் பிடிப்பவனாய் இருப்பாய் என்று இயேசு யாருக்கு கூறினார்?
   1. கிளேயோப்பா
   2. தோமா
   3. மத்தேயு
   4. பேதுரு

33) பிள்ளைகளைப் பற்றி கூறிய வசனங்களில் பிள்ளைகளாகிய உங்களுக்கு இயேசு கூறும் சவாலாவது கூற்று அல்லாதது
   1. அவர்களை தடுக்காதிருங்கள் என்பது
   2. பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்
   3. தேவனுடைய இராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையது என்பது
   4. என்னுடைய ஆடுகளை போஷியுங்கள் என்பது



kalvi.lk

34) நெருக்கங்களுக்கு முகங்கொடுகிறவர்களுக்காக பவுலின் தலைமையில் கிறிஸ்தவர்களுக்கு கிடைத்த வழிகாட்டல் யாது?
1. அவர்களின் உலக ரீதியான தேவைகள் சந்திக்கப்படல்.
2. அவர்களின் ஆன்மீக விசுவாசத்தை உறுதிப்படுத்தி அவர்களை பெலப்படுத்தல்
3. செயல்படா விட்டாலும் இறை உதவியை அவர்கள் பெற்றுக் கொள்ள வழிகாட்டல்.
4. ஆறுதலை பெற்றுக் கொடுப்பேன் என்று உறுதியாக பொருந்தனை பண்ணுதல்.

35) வெவ்வேறு இனத்தார் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்,
1. சூழலுடனும் பிற இனத்தவரோடும் இசைந்து வாழுதல்.
2. பாவத்தின் விளைவுகள் பற்றி எல்லோருக்கும் கற்பித்தல்
3. வெவ்வேறு நாட்டின் காலாசாரங்கள் பற்றி விமர்சித்தல்.
4. பிற மதத்தவர்களோடு வரையறையோடு உறவு வைத்துக் கொள்ளல்.

36) நிகழ்காலத்தில் கிறிஸ்தவ பெண்களின் முக்கிய விடயமாக இருப்பது,
1. கிறிஸ்தவ விழாக்களில் உபசரிப்பது.
2. பெண்கள் சங்கத்திற்கூடாக செயற்படுதல்
3. பெண் ஊழியராக வருவதற்கு விண்ணப்பித்தல்
4. முடிந்தளவு கிறிஸ்தவ பணிகளில் பங்கு கொள்வது.

37) புளிப்பு மா பற்றிய உவமையை தனது வாழ்வில் செயற்படுத்தும் கிறிஸ்தவர்,
1. இறைவல்லமையால் இறையரசு வளர்ச்சியடைகிறது என விசுவாசிக்க வேண்டும்.
2. இறையரசின் பரம்பலுக்குள்ள தடைகளை அறிந்து கொள்ள வேண்டும்.
3. இறையரசின் பாரிய வளர்ச்சியை அளவிடுவதற்கு செயல்பட வேண்டும்.
4. இறையரசு வளர்ச்சியடையும் காலத்தில் அதில் செயலூக்கமுடன் பங்கு கொள்ள வேண்டும்.

38) கிறிஸ்தவராகிய எமது முக்கியமான இலக்காக இருக்க வேண்டியது,
1. அனைத்து நன்மைகளையும் கைப்பற்றிக் கொள்ளல்.
2. அடிமைத்தனத்தை ஆரம்பத்திலேயே தகர்த்தல்.
3. சவால்களையும் தடைகளையையும் மேற்கொள்ளல்
4. இறையரசின் பிரசையாகுதல்

39) மெசியாவின் வருகை நிறைவேறும் என இறைவாக்கினர் முன்னறிவித்தது.
1. சவுலின் வழிமரபில்
2. யோவாக்கீம் வழிமரபில்
3. தாவீதின் வழிமரபில்
4. அகஸ்வேருவின் வழிமரபில்

40) இயேசுவை தீர்ப்பிடும் போது பிலாத்து கண்டு கொண்டது
1. இயேசுவின் ஒன்றுமறியா தன்மை, மக்களின் கவலை
2. இயேசுவின் வாதிடும் தன்மை, மக்களின் குற்றமற்ற நிலை
3. இயேசுவின் அதிகாரம், மக்களின் தாழ்மை
4. இயேசுவின் குற்றமற்ற தன்மை, மக்களின் எதிர்ப்பு

(40X1=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – 11

- **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) i. சீசருக்குரியதை சீசருக்கும் கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுங்கள். இதன் பொருளை விளக்குக. ( 6 புள்ளிகள்)
   ii. திராட்சத்தோட்ட குத்தகைக்காரர் உவமையினை விளக்குக. ( 6 புள்ளிகள்)

2) i. நாசரேத்து அறிக்கை மூலம் இன்றைய சமுகத்திற்கு கிடைக்கும் எதிர்ப்பார்ப்பு என்ன என்பதை விளக்குக. ( 6 புள்ளிகள்)
   ii. நாசரேத்து அறிக்கைக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு இயேசு எவ்வாறான பதிலைக் கொடுத்தார்? ( 6 புள்ளிகள்)

3) i. பெரிய வெள்ளி அன்று கிறிஸ்தவர்களாகிய நாம் தியானிக்கும் இரண்டு காரியங்களை எழுதுக. ( 4 புள்ளிகள்)
   ii. ஏலி எலி லாமா சபக்தானி என்பதன் அர்த்தம் யாது? ( 4 புள்ளிகள்)
   iii. இயேசு மரித்தெழுந்ததன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் நன்மைகளை எழுதுக. ( 4 புள்ளிகள்)

4) i. இயேசுவின் பிறப்பின் இடம் குறித்து அறிந்து கொள்வதற்கு காபிரியேல் தேவதூதன் கூறிய அடையாளங்கள் எவை? ( 4 புள்ளிகள்)
   ii. இயேசுவின் வளர்சியைக் குறித்து கூறப்படும் வேதாகப் பகுதி யாது? ( 4 புள்ளிகள்)
   iii. பன்னிரண்டு வயதில் இயேசுவைப் போல் பிதாவோடு செயற்பட நீங்கள் செய்யக்கூடிய 3 விடயங்களைத் தருக. ( 4 புள்ளிகள்)

5) i. வனாந்தரத்தில் இயேசு மேற்கொண்ட மூன்றாவது சோதனையின் பதில் யாது? ( 4 புள்ளிகள்)
   ii. அச் சோதனையின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் படிப்பினை யாது? ( 4 புள்ளிகள்)
   iii. எங்களுக்கு வரும் சோதனைகளை நாம் எவ்வாறு வெற்றி கொள்ளலாம்? ( 4 புள்ளிகள்)

6) i. இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்த நிகழ்வில் இரு பிரிவினரால் ஏற்பட்ட சவால்களை குறிப்பிட்டு விளக்குக. ( 4 புள்ளிகள்)
   ii. இயேசுவின் மூலம் நிகழ்ந்த அப்பம் பிட்குதலின் நிகழ்வுகளைக் குறிப்பிட்டு, அதன் பாரம்பரியம் கிறிஸ்தவரான எமக்கு வெளிப்படுத்துவது என்ன? ( 4 புள்ளிகள்)

7) நீர் விரும்பிய இரண்டு தலைப்புகளுக்கு சிறுகுறிப்பு எழுதுக
   i. சிலுவை அடிவாரத்தில் இருந்த மரியா
   ii. மரியா – யோசேப்பு
   iii. ஜெபம் கிறிஸ்தவ வாழ்வின் பெரிதான ஆயுதம்.
   iv. திருவிவிலியம். (6X2= 12 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**